**OS No.6/2021**

PW 1 - அர்ஜுனன்

நாள் 26.03.2026

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.**

கீழ்புறம் உள்ள சொத்தை என் சகோதரிக்கு ( கண்ணம்மாளுக்கு )என் அப்பா எழுத்து மூலமாக எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் எழுதிக்கொடுத்துள்ளார். என்ன ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்று எனக்குத் தெரியவில்லை.

கிழமேல் எவ்வளவு அடி அளவுகள் எழுதிக்கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த சொத்திற்கு என் சகோதரியின் கணவர் பெயரில் பட்டா ஏற்பட்டுவிட்டது. என் தகப்பனார் கிரயம் பெற்ற 1976 ம் கிரயப்பத்திரப்படி இரண்டு இலக்க சொத்துக்களும் 79 அடி அளவுகள் உள்ளன. உங்கள் சகோதரிக்கு உங்கள் தகப்பனார் எழுதிக்கொடுத்த இதர பகுதிகளைத் தான் நானும் என் சகோதரரும் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான்.

நானும் என் சகோதரரும் பிரித்துத்கொண்டதற்கு எழுத்துப்பூர்வ ஆவணம் உண்டா என்றால் இல்லை. நாங்களாகவே பிரித்துக்கொண்டோம். 1972 ல் என் தகப்பனார் தாவாப் பகுதியில் ஒரு சொத்தை கிரயம் பெற்றுள்ளார். அதை நானும் என் சகோதரரும் பிரித்துக்கொண்டாம். 1972 ம் தேதிய கிரயப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

உங்களுக்கும் உங்கள் சகோதரருக்கும் இடையில் பாகப்பிரிவினை சம்பந்தப்பட்ட வழக்கு ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். இந்த தாவா சொத்து அந்த வழக்கில் இல்லை. என் தகப்பனார் கிரயம் பெற்ற கிரய ஆவணத்தில் தாவா சொத்து சேரவில்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் கண்ட சொத்து என் தகப்பனார் கிரயம் பெற்ற 1976 ம் கிரயப்பத்திரத்திற்கு ( வா.சா.ஆ 1 ஆவணத்திற்கு ) விரோதமாக உள்ளது என்றால் சரியல்ல. உங்கள் வழக்கு தாவா சொத்திற்கு கொடுக்கப்பட்ட நான்குமாலும் பூமியில் உள்ள நான்குமாலுக்கும் விரோதமாக உள்ளது என்றால் பிராதில் கண்ட உத்தேச வரைபடம் எனக்குத் தெரியாது. சர்வே எண் ஆவணத்தில் உள்ளபடி தெரியும்.

1976 ல் என் தகப்பனார் கிரயம் வாங்கிய சமயத்தில் நத்தம் நில வரித்திட்டம் சர்வே கிடையாது. அதனால் வா.சா.ஆ 1 ல் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நத்தம் சர்வே எப்போது நடைபெற்றது என்று எனக்குத் தெரியாது. நத்தம் சர்வே நடைபெற்ற காலத்தில் உங்கள் கிரய ஆவணத்திற்கு எதிராகவும் பிரதிவாதி கிரய ஆவணத்திற்கு எதிராகவும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நீங்கள் சொல்வது போல் புல எண் 11/19 சொத்தில் உங்களுக்கு எந்த பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்தில் நீங்கள் எந்த காலத்திலும் அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 ல் கண்ட கிரய ஆவணத்திற்கு விரோதமாக வருவாய் துறையில் என் பெயருக்கு தவறுதலாக புல எண் 11/19 பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

உங்கள் சொத்தில் பிரதிவாதிகள் மூன்று பக்கங்களிலும் வேலி அமைப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். அந்த வேலி அமைப்பிற்கு மேற்கு பகுதியில் புதுகால்வாய் உள்ளது. வேலி அமைப்பிற்கு வடபுறம் பழனிசாமி இடம் உள்ளது. வேலி அமைப்பிற்கு தென்புறம் லெட்சுமனபிள்ளை வகையறா இடம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

கீழ்புறம் உள்ள வேலி எனக்குள்ள புல எண் 11/19 ல் 10 அடி உள்பகுதி உள்ளது. மேலும் வடக்கு, மேற்கு பகுதியில் உள்ள என் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். வடக்கு, மேற்கு பகுதியில் ஆக்கிரமிப்பு

செய்துள்ளதை பிராதில் சொல்லியுள்ளீர்களா என்றால் கம்பிவேலி போட்டுள்ளதாக சொல்லியுள்ளேன், எந்தெந்த பகுதி என்று சொல்லவில்லை.

பிரதிவாதி கம்பிவேலி போட்டுள்ள இடம் அவருக்கு அவரது தாயார் 18.10.1972 ல் கிரயம் பெற்ற சொத்தைத் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை பிரதிவாதியின் தாயார் சீனியம்மாள் அந்த சொத்தை 1979 ம் வருடம் கிரயம் பெற்றுள்ளார்.

என் தகப்பனார் கிரயம் வாங்கிய அழகர்சாமி தேவரிடம் தான் பிரதிவாதியின் தாயார் சீனியம்மாள் 1979 ம் வருட கிரய ஆவணத்தின் மூலம் கிரயம் பெற்றுள்ளார். அந்த கிரய ஆவணத்தை நான் பார்த்ததில்லை. 1976 ல் அழகர் சாமியிடம் என் தகப்பனார் கிரயம் பெற்ற 79 அடியைத் தவிர்த்து அதன் மேல்புறம் உள்ள பகுதியைத் தான் பிரதிவாதியின் தாயார் சீனியம்மாள் கிரயம் பெற்ற காலத்தில் வேலி அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

அவர் கிரயம் பெற்ற பகுதியில் ஒரு பகுதியில் சர்வே எண் 11/19 பகுதி தவறுதலாக சேர்ந்துவிட்டது என்றால் சரியல்ல. சர்வே எண் 11/19 அவருடைய இடம் இல்லை 1972 ம் வருடம் கிரயம் சொல்லித்தான் பிரித்தோம். 1972 ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்னமாதிரி பிரித்துக்கொண்டோம் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

பிரதிவாதியும் அவருடைய தாயார் சீனியம்மாளும் வெளியூரில் வசித்து வருகிறார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் பிரதிவாதி மதுரையில் தான் இருந்து வருகிறார். பிரதிவாதியும் அவரது குடும்பமும் நீங்கள் சொல்லக்கூடிய சர்வே காலத்தில் கிராமத்தில் இல்லாததால் தவறுதலாக பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சர்வே எண் 11/19 சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் நீங்கள் எந்த காலத்திலும் சொத்தை அனுபவம் செய்ததில்லை என்றால்

சரியல்ல. நான் தான் அனுபவம் செய்துவருகிறேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள உத்தேச வரைபடத்தில் A,B,E, F என குறிப்பிட்டுள்ள பகுதியும் அதற்கு மேற்கே உள்ள சொத்தும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அதை பொறுத்து நீங்கள் கேட்கும் பரிகாரம் உங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

தாவா சொத்தை நீதிமன்ற ஆணையாளர் பார்வையிட்டு அவரது வரைபடத்தில் A,B,E,F பகுதியில் உள்ள சொத்து உங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் என் பட்டா இடத்தில் தான் போட்டுள்ளார்.

ஆணையாளர் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள A,B,E,F பகுதியானது என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ 1 ஆவணத்தில் கட்டுப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு பொறுத்து உங்களுக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

–Sd–

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

–Sd–
District Munsif,
Manamadurai.